**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007ம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## சாதாரணக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள்** **" தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு "**

**பொருள்** தீயினால் சுட்டபுண் முதலில் கொடுத்த நோய்த் துன்பம் நாளடைவில் நீங்கிப் போக உடலின் மீது வடுமட்டும் நிற்கும், ஆனால் தீச்சொல்லினால் சுட்டபுண் உள்ளத்தில் என்றும் ஆறாது நின்று, என்றும் நினைவில் நீங்கா வடுவாக அமைந்துவிடும்.

**ஆ)** **தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

## <u>1)</u> <u>சி.டபிள்யு.2 / 4395 / 2007</u>

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 14.2.2007ம் தேதி நடைபெற்ற கணக்குக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கணக்குக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 368</u>**
**பதிவு செய்யப்பட்டது.**

**<u>2)</u>** **<u>சி.டபிள்யூ.2 / 39182/ 2006</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 20.2.2007ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 369</u>**

**பதிவு செய்யப்பட்டது.**

**<u>3)</u>** **<u>ம.நி.1 / 09461/03</u>**

மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளர் பணியிடத்திற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையிலிருந்து திரு. என். மோனி அவர்களை பணிமாறுதல் மூலம் பணி நியமனம் செய்து வெளியிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளரின் செயற்குறிப்பு எண்.21155/06/C1, நாள்.7.2.2007-ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>குறிப்பு :</u>** திரு. என். மோனி வடக்கு மண்டல உதவி ஆணையாளராக 15.2.2007 மு.ப. முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 370</u>**

**பதிவு செய்யப்பட்டது.**

**<u>4)</u>** **<u>ம.நி.5/4474/07</u>**

தமிழக அரசின் சார்பாக, மதுரை மாநகராட்சியின் தமுக்கம் மைதானம் மற்றும் கலையரங்கத்தில் ஆண்டுதோறும் அரசு சித்திரைப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இவ்வாண்டும் அதே பொருட்காட்சி நடத்திட, தமுக்கம் மைதானம் மற்றும் கலையரங்கத்தினை 25.3.2007 முதல் 20.6.2007 வரை ஒதுக்கீடு செய்து தருமாறு செய்தி மற்றும் சுற்றுலா பொருட்காட்சித் துறை இணை இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் கடிதம் எண். 1827/பொருட்காட்சி/07, நாள் : 7.2.2007–ல் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மதுரை மாநகராட்சியின் தமுக்கம் கலையரங்கம் மற்றும் மைதானத்தில் அரசு சித்திரைப் பொருட்காட்சியை நடத்துவதன் மூலம் கிடைக்கப் பெறும் மொத்த நிகர லாபத் தொகையில் 50% இலாப பங்குத் தொகையை இம்மாநகராட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்ற வழக்கமான நிபந்தனைக்குட்பட்டும் அரசு பொருட்காட்சி'2007-ஐ தமுக்கம் கலையரங்கம் மற்றும் மைதானத்தில் நடத்திக் கொள்ள செய்தி மற்றும் சுற்றுலா (பொருட்காட்சித்) துறை இணை இயக்குனர் (நிர்வாகம்) அவர்களுக்கு 25.3.2007 முதல் 20.6.2007–ந் தேதி முடிய தமுக்கம் கலையரங்கம் மற்றும் மைதானத்தை ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கியதை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** 2005–ம் ஆண்டிற்குரிய மாநகராட்சிக்குரிய 50% பங்குத் தொகை ரூ.25,06,397/- பெறப்பட்டு மாநகராட்சி கணக்கில் 13.02.2007-ல் வரவு வைக்கப்பட்டது என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 371</u>**

**பதிவு செய்யப்பட்டது.**

**<u>5)</u>** **<u>ம.நி 1/ 17722 /2000</u>**

மதுரை மாநகராட்சி ஆயுர்வேதிக் மருந்தகங்களில் பணியிடங்களை நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டுக்கு வைத்துக் கொள்ள அனுமதி அளித்து வெளியிடப்பட்ட அரசு ஆணை நிலை எண்.**252**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : **2.12.98–ன்** படி அனுப்பானடி மாநகராட்சி ஆயுர்வேதிக் மருந்தகத்தில் திரு.கே.எஸ்.பாலசுப்பிரமணியன் மருத்துவ அலுவலராக நியமனம் செய்யப்பட்டு **20.3.2000–ம்** முதல் பணிபுரிந்து வருகிறார். இந்த மருத்துவமனையில் உள்ள மருத்துவ அலுவலர் பணியிடத்தை நிரந்தரமாக்க வைத்துக் கொள்ள மாமன்றத் தீர்மானம் எண்.**147**, நாள் :**6.7.2005–ல்** தீர்மானம் பெற்று அரசுக்கு அனுப்பியதில், அரசு ஆணை (ப) **485** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : **23.12.2005–ல் 20.3.2001** முதல் **19.3.2005** வரை இந்த பணியிடத்தை நீடிப்பு செய்வதற்கு பின்னேற்பும், **20.3.2005** முதல் மேலும் ஓராண்டுக்கு **19.3.2006** வரை மட்டும் நீடித்து அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. மேற்படி மருத்துவ அலுவலர் பணியிடத்தை **20.3.2006** நிரந்தரமாக நீடிக்க மாமன்றத் தீர்மானம் எண்.**522**, நாள் : **25.1.06** அரசினரின் அனுமதி கோரப்பட்டது.

அரசாணை (பத்தாண்டு) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 19.1.07–ல் அனுப்பானடி ஆயுர்வேதிக் மருத்துவ அலுவலர் பணியிடத்தை, 20.3.2006 முதல் 19.3.2007 வரை மட்டும் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டதை மாமன்றத்தின் தகவலுக்கும், வளர்ந்து வரும் மாநகராட்சி அனுப்பானடி பகுதியில் உள்ள ஆயுர்வேதிக் மருந்தகம் இன்றியமையாததாக உள்ளதால் மேற்படி மருத்துவ அலுவலர் பணியிடத்தை 20.3.2007 முதல் நீடித்து நிரந்தரமாக வைத்துக் கொள்ள அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 372</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## <u>6) ம.தி.1 / 2692 / 2007</u>

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மதுரை தெற்கு வட்டம் வடக்கு மதுரை கிராமம் புல எண்.1017 - 1பி சர்வே வார்டு X பிளாக் B9-ல் கண்டுள்ள 0.25 சென்ட் நிலத்தை காவல்துறை குற்றப்பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறை, துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டுவதற்காக மாநகராட்சி தீர்மானம் கோரப்பட்டுள்ள மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக ந.க.எண்.ஓய்2/111322/2004, நாள். 28.12.2006-ந் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு, மேற்காணும் இடம் பொதுப்பணித்துறையின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமானதால் காவல்துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய மாநகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என்ற விபரத்தை மாவட் ஆட்சித்தலைவருக்கு தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 373</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## <u>7) ம.வ.5 / 2242 / 07</u>

மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில், கனரா வங்கி ATM மையம் அமைக்க 100 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்து தரும்படி கனரா வங்கியின் மேலாளரின் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளதாலும், பொதுமக்களின் சேவையை கருத்தில் கொண்டும் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் முன் நுழைவு வாயில் மேல்புறம் உள்ள போக்குவரத்து கழக விசாரணை கட்டுப்பாட்டு அறையை ஒட்டி தென்புறம் உள்ள காலியிடத்தில் 10x10=100 சதுர அடி காலியிடத்தை ஒரு சதுர அடிக்கு ரூ.17.50 வீதம் மாத வாடகை ரூ.1750/- ம் வைப்புத் தொகை ரூ.1,00,000/- நிர்ணயம் செய்து கனரா வங்கியின் நிறுவனத்தாரே தங்களது சொந்த செலவில், மாநகராட்சி பொறியாளர் கண்காணிப்பில் கட்டிடம் கட்டி ATM மையம் அமைத்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், மேற்படி காலியிடம் ஒதுக்கீடு செய்து உரிய உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 374</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## <u>8) B30/13487/2006</u>

மதுரை மாநகராட்சி லாரி நிறுத்துமிடத்தில் உபயோகப்படுத்தப்பட்டு தற்போது உபயோகப்படுத்த இயலாத நிலையில் கழிதல் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட வாகனங்களை ஏலம் / டெண்டர் மூலம் விற்பனை செய்ய நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று (கடிதம் எண் (ROC15767/06/E1 நாள் 04.04.2006)அதன் பேரில் மதுரை அரசு தானியங்கி பணி மனை தானியங்கி பொறியாளர் அவர்களின் மதிப்பு பெறப்பட்டுள்ளது.

அதன் பேரில் ஏலம்/ டெண்டர் மூலம் விற்பனை செய்ய நாளிதழில் விளம்பரம் வெளியிட்டு 28.11.2006 இல் ஏலம்/டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்ட வாகனங்களுக்கு வரப்பெற்ற டெண்டர்களில் மற்ற டெண்டர்களின் விலை விகிதத்தினைவிட கூடுதலாகவும் மாநகராட்சி மதிப்புக்கும் கூடுதலாகவும் கொடுத்துள்ள கீழ்கண்ட டெண்டர்தாரர்கள் கொடுத்துள்ள விலை விகிதத்தினை ஏற்றுக் கொள்ளவும் டெண்டர் தொகையுடன் விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் சேர்த்து செலுத்திய பின்பு டெலிவரி வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ. எண் | கோப்பு எண் | கழிதல் வாகனம் விபரம் | மாநகராட்சி மதிப்பு | டெண்டர்தாரர் | டெண்டர் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | B30/13487/06 | TNA 2933<br>மகேந்திரா ஜீப் | ரூ.22,000 | உடையப்பா பொறியியல் கல்லூரி தேனி | ரூ.22,101 |
| 2 | B30/13490/06 | TNA 3105<br>மகேந்திரா ஜீப் | ரூ.25,000 | G.இளங்கோவன்<br>28 மோதிதிலால் 1வது தெரு மதுரை - 16. | ரூ.26099 |

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 375</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**9) <u>ம.பொ.7 / ம.எண்.1422 / 06</u>**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.29 எல்லீஸ்நகர் பகுதியிலுள்ள பாதாள சாக்கடை பைப் லையனில் மண் அகற்றுதல், அனைத்து மேன்ஊேறால்களில் தேங்கியுள்ள மண்களை அகற்றுதல், கழிவுநீர் சேகரிப்பு பெரிய கிணறுகளில் மண் அகற்றுதல், சேதாரம் அடைந்த கழிவுநீர் பைப்களை அகற்றி புதிய பைப் லைன் அமைத்தல், கூடுதலாக புதிய மேன்ஊேறால்களை உயர்த்தி கட்டுதல் மற்றும் கழிவுநீர் சேகரிப்பு கிணறுகளை பாதப்படுத்தி கட்டுதல் ஆகிய வேலைக்கு 2006-2007ம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.16,75,000/-க்கு (ரூபாய் பதினாறு லட்சத்து எழுபந்தைந்து ஆயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மாமன்ற நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 376</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**<u>10) ம.பொ.4/38954/06</u>**

M/s Toilets & Toilet Pvt.Ltd., D.No. 1716, 6th Main, 2nd stage, Vijayanagar, Mysore என்ற நிறுவனம் மதுரை மாநகராட்சி பகுதிகளில் தனது சொந்த செலவில் BOOT (Build Operate Own Transfer) என்ற திட்டத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட இடங்களில் நவீன முறையில் கழிப்பிடம் அமைக்க ஒப்புதல் கோரியுள்ளார்.

1) மாநகராட்சி ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்
2) மீனாட்சி பூங்கா
3) செல்லூர் பாலம் ஸ்டேசன் ரோடு

மேற்க்கண்ட கழிப்பறைகளை உருவாக்கம், இயக்கம் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) திட்டத்தின் கீழ் செயல்படுத்தவும் இத்திட்டத்தின் கீழ் 20 ஆண்டுகள் பரமரித்து அதன் மூலம் கிடைக்கப்பெறும் கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் வசூல் செய்து இயக்கவும் மீண்டும் 20 ஆண்டுகள் கழித்து அதே நிலையில் மாநகராட்சிக்கு ஒப்படைக்கவும், மேற்கண்ட ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு கட்டணம் வசூல் செய்து கொள்ளவும் இதனை தெரிவித்துள்ளனர்

**<u>கட்டண விபரம்</u>**

| | |
|---|---|
| 1) யூரினல் | - ரூ.1.00 |
| 2) கழிப்பறை | - ரூ. 2.00 |
| 3) குளியலறை | - ரூ. 5.00 |

மேலும் இந்நிறுவனம் கோயமுத்தூர் மாநகராட்சியில் இந்த BOOT திட்டத்தின் கீழ் நான்கு இடங்களில் கட்டணகழிப்பறை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தது அதற்கான உத்தரவை இணைத்து உள்ளனர். எனவே, இதே போன்று மதுரை மாநகராட்சி பகுதியல் நவின கட்டண கழிப்பறை அமைக்க மேற்படி நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவது குறித்து மாமன்றத்தின் பரிசிலனையை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 377</u>**

**<u>இந்நிறுவனத்தைப் போல் மற்ற தனிநபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் இந்த பணியை செய்ய முன் வருமானால் அதனையும் பரிசீலனை செய்து அடுத்த கூட்டத்தில் வைக்க வேண்டியது என தீர்மானிக்கிறது.</u>**

**<u>11) ம.தி.2/ 0069 / 05</u>**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஆரப்பாளையம் கிராமம் ஆர்.எஸ்.எண். 31/6A-ல் இயங்கி கொண்டிருக்கும் ஸ்ரீமாப்பிள்ளை விநாயகர் மற்றும் ஸ்ரீ மாணிக்க விநாயகம் திரையரங்களுக்கு பக்கத்தில் மேலும் இரண்டு குளிரூட்டப்பட்ட திரையரங்குகள் அமைப்பதற்கு தடையில்லா சான்று கோரியுள்ள மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கடிதம் ந.க.எண்.சி.1/68965/2006, நாள். 5.1.2007-ம் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு நிலையிலுள்ள இரண்டு திரையரங்குள் மற்றும் உத்தேச இரண்டு மினி திரையரங்குகள் ஆகியவற்றிற்கு போதுமான வாகனங்கள் நிறுத்த" வாகன நிறுத்துமிட உப விதிகளின்படி" இட வசதி உள்ளதாலும், விதிகளை திருத்தி செய்வதாலும், தடையில்லா சான்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 378</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

**மதுரை**
**நாள் : 9.3.2007**

**"கண்ணைக் காப்பது இமை"**
**"மண்ணைக் காப்பது மழை"**

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007**ம் ஆண்டு **மார்ச்**திங்கள் **15-ம்** நாள் **வியாழக்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

1) **சி.டபிள்யு.2 /00883 / 2007**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 21.2.2007ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 379**
**பதிவு செய்யப்பட்டது**

**2) ம.பொ.4/ம.எ.1575/06-07**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகளை சீரமைத்தல், ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல், பைப்லைன் பழுது பார்த்தல் கழிப்பறைகள் அமைத்தல் பழுதுபட்ட கழிவுநீர் குழாய்களை மாற்றியமைத்தல் தெருவிளக்குகளை மேம்படுத்துதல் மற்றும் புதிய தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற அத்தியாவசிய பணிகளுக்காக “அடிப்படை வசதி திட்டம்” கீழ் பணிகள் எடுத்துக் கொண்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) வேலைகளின் அவசர அவசியத்தை கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 380**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

3) **ம.பொ.8 /5023 / 2007**

மதுரை மாநகராட்சிப்பகுதிகளில் குடிநீர் மெயின் இல்லாத பகுதிகளுக்கு குடிநீர் தனியார் லாரிகள் மூலம் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. ஏற்கனவே உள்ள மாமன்றத் தீர்மானத்தின் ஒப்புதலின் படியும், தற்போது திரு.M/s Jeyavarshini Transport, Chennai - க்கு லாரி ஒன்றுக்கு (நடை ஒன்றிக்கு) ரூ.272/- (ரூபாய் இருநூற்றி எழுபத்திரெண்டு ) வீதம் தற்போது 1.3.07 முதல் 29.02.08 வரை உள்ள 12 மாதங்களுக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 381**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

4) **<u>ம.பொ.5 / 1851 / 06-07</u>**

மதுரை மாநகராட்சி வார்டு எண் 58ல் மூலக்கரை மயான வளாகத்தில் நவீன எரியூட்டும் மயானம் (Gasifier crematorium) அமைக்கும் வேலைக்கு 2006 – 07ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.96,15,000/- க்கு (ரூபாய் தொன்னூற்றாறு லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலைக்கு நிர்வாக ஒப்புதல் அரசிடமிருந்து பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 382</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

5) **<u>ம.பொ.5 / 1852 / 06-07</u>**

மதுரை மாநகராட்சி வார்டு எண் 53ல் அனுப்பானடியில் அமைந்துள்ள காலியிடத்தில் புதிதாக நவீன முறையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஆடுவதை செய்யும் இடத்திற்கு (Slaughter House) கட்டிடம் கட்டும் வேலைக்கு 2006 – 07ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.75,00,000/- க்கு (ரூபாய் எழுபத்தைந்து லட்சம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலைக்கு நிர்வாக ஒப்புதல் அரசிடமிருந்து பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 383</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

6) **<u>ம.பொ.8 / 7809 / 07</u>**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு மாநகராட்சி லாரி மூலம் குடிதண்ணீர் சப்ளை கோரி பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து உரிய விண்ணப்பத்தில் மனு செய்கின்றனர். மனுக்களின் பேரில் ஒரு லாரி லோடு குடிதண்ணீருக்கு ரூ.250/- கட்டணமாக பெற்றுக் கொண்டு மாநகராட்சி எல்லைக்குள் தற்போது குடிதண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. குடிநீருக்கு வசூலிக்கப்படும் கட்டணத்தை ரூ.250/-ல் இருந்து ரூ.400/- என உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ஒரு லாரி குடிதண்ணீருக்காக ரூ.400/- என்ற அடிப்படையில் 1.4.07 ம் தேதி முதல் கட்டணமாக பெற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 384</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**7) <u>ம.நி.1/7510/2007</u>**

மதுரை மாநகராட்சி பணியாளர்களுக்கு வெளியிடப்பட்ட பணிவிதிகள் அரசாணை நிலை எண். **237** , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் : **26.9.96–**ன் படியும், மதுரை மாநகராட்சிப் பணியாளர்கள் பணியிடங்கள் நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை எண் **76**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் : **12.5.98 –**ன்படியும் , தோற்றுவிக்கப்பட்டுள்ள **4** நிர்வாக அலுவலர் பணியிடங்களும், **3** கணக்கு அலுவலர் பணியிடங்களும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு மதுரை மாநகராட்சிப் பணியாளர்களிலிருந்து பணிஉயர்வு மற்றும் பணி மாறுதல் மூலம் நிரப்பப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது, கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பணியிடங்கள் ஒரே சம்பள விகிதமாகவும், ஒன்றுக் கொன்று பணிமாறுதல் செய்யக்கூடிய பணியிடங்களாக உள்ளதால், **2000–**ம் ஆண்டு வெளியிடப்பட்ட பணிமூப்புப் பட்டியலின் அடிப்படையில் **2007–2008–**ம் ஆண்டிற்கு கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்ப ஏற்கனவே மாமன்றத் தீர்மானம் எண்.**25**, நாள் : **29.6.06–**ன் படி பணி உயர்வுப் பட்டியலில் உள்ள **3** கண்காணிப்பாளர்களையும் சேர்த்து கீழ்க்கண்ட **6** நபர்கள் கொண்ட பணி உயர்வுப் பட்டியல் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

1. திரு.S.கலைச்செல்வன், கண்காணிப்பாளர்.
2. திரு.R.கருணாகரன், கண்காணிப்பாளர்.
3. திருமதி.M.A.ஷாஜஹான், கண்காணிப்பாளர்.
4. திரு.S.குழந்தைவேல், கண்காணிப்பாளர்.
5. திருமதி.S.P.ராஜகாந்தி, கண்காணிப்பாளர்.
6. திரு.V.சந்திரமோகன், கண்காணிப்பாளர்.

<u>குறிப்பு :–</u>

1. பணிவிதிகளின்படி கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பணியிடங்கள் இரண்டாம்நிலை பணியிடங்கள், இவை இரண்டும் ஒரே சம்பள விகிதத்தில் உள்ளன.
2. இந்த இரண்டு பணியிடங்களும் மாநகராட்சி பணியாளர்களிலிருந்து பணி உயர்வு மற்றும் பணி மாறுதல் மூலம் நிரப்பப்படும் பணியிடம் ஆகும்.
3. பணி விதிகளில் நிர்வாக அலுவலராகப் பணி மாறுதல் செய்ய 2 ஆண்டுகள் கணக்கு அலுவலராகப் பணிபுரிந்திருக்க வேண்டும் என்றும் , கணக்கு அலுவலர் பணி உயர்வு செய்ய இரண்டு ஆண்டுகள் கணக்குப் பிரிவில் கண்காணிப்பாளராகவும் இரண்டு ஆண்டுகள் கணக்கராகவும் பணிபுரிந்திருக்க வேண்டும் என்றும் உள்ளது,
4. மாநகராட்சிப் பணியாளர்கள் எவரும் இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ளதால், இந்த நிபந்தனையை தளர்வு செய்ய அரசுக்கு இவ்வலுவலகக் கடிதம் எண்.மநி1/00763/01, நாள் : 30.8.2005–ல் உத்தேச பிரேரணை அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.
5. பணி முதிர்ச்சிப் பட்டியலில் உள்ள நபர்கள் பணிவிதிகளில் உள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யாததால், அரசின் உறுதியாக்கம் மற்றும் அரசு உத்திரவுக்கு உட்பட்டு பணி உயர்வு வழங்கப்படும்.
6. இந்தப் பணியாளர்கள் பணி உயர்வு செய்யப்பட்டாலும் , இவர்களது பணி உயர்வு அரசின் உறுதியாக்கம் பெறப்பட்ட பின்னரே அதற்குண்டான சம்பளவிகிதம் வழங்கப்படும். அதுவரை ஏற்கனவே பெற்றுவரும் சம்பள விகிதம் நீடிக்கப்படும்.

<u>மாமன்ற தீர்மானம் எண் : 385</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 8) <u>ம.நி.1/4861/07</u>

மதுரை மாநகராட்சிக்குப் பணியிடங்கள் தோற்றுவித்து வெளியிடப்பட்ட அரசாணையில் உள்ளவாறு அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களில், காலியாக இருந்து வரும் கீழ்க்கண்ட பணியிடங்களை , பணிவிதிகளில் உள்ளவாறு நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண். 41, நாள் : 21.2.07–ல் உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

*" மழைநீரை சேமிப்போம் – மண்வளம் காப்போம் "*

| வ.எண். | பணியிடம் | நேரடி நியமனம் மூலம் நிரப்ப அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 |
| 2. | ஓட்டுநர் | 20 |
| 3. | உதவிப்பொறியாளர் | 8 |
| 4. | தேர்ச்சி திறன் பணியாளர் தரம் –2 | 29 |
| 5. | மருத்துவ அலுவலர் | 11 |
| 6. | பார்மஸிஸ்ட் | 24 |
| 7. | பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் | 20 |

மேற்படி பணியிடங்களை நிரப்புவதால் ஆண்டு 1–க்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,17,32,940,– ஆகும். மேற்படி அரசாணையில், காலி பணியிடங்களை நிரப்புவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தையும் சேர்த்து, மாநகராட்சியின் மொத்த வருவாயில் பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதிய செலவினம் 49 சதவீதத்திற்கும் கூடுதலாக இருக்கக்கூடாது எனவும், அவ்வாறு கூடுதல் செலவினம் ஏற்படும் மாநகராட்சிகளில் மேற்படி பணியிடங்களை பூர்த்தி செய்ய அரசின் ஒப்புதல் பெறப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி பணியிடங்களை பூர்த்தி செய்வதன் அவசியம் குறித்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமெனவும், ஏற்கனவே உள்ள அரசாணைகளில் உள்ளவாறும், வகுப்புவாரி சுற்று அடிப்படையிலும நியமனங்கள் விதிமுறைகளுக்குட்பட்டு நிரப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள சுருக்கெழுத்தர் பணியிடங்கள் துணை ஆணையாளர், நகரப்பொறியாளர் மற்றும் நீதி அலுவலருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதில், தற்போது ஒரு பணியிடம் காலியாக உள்ளது. மேலும் வயது முதிர்வின் காரணமாக வரும் 31.8.07–ல் ஒரு

சுருக்கெழுத்தர் ஓய்வு பெறுவதால் மேலும் ஓர் பணியிடம் காலி ஏற்படுகிறது. எனவே தற்போது காலியாக உள்ள ஓர் சுருக்கெழுத்தர் பணியிடம் நிரப்புவது அவசியமாக உள்ளது.

மாநகராட்சியில் உள்ள வாகனம் ஒன்றுக்கு ஒரு வாகன ஓட்டுநர் வீதம் 91 பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில், தற்போது 20 ஓட்டுநர் பணியிடங்கள் காலியாக உள்ளதால், குடிநீர் விநியோகம் மற்றும் குப்பை அகற்றும் பணிகள் தாமத மேற்படுவதாலும் 20 வாகன ஓட்டுநர் பணியிடங்களை பூர்த்தி செய்வது அவசியமானதாக உள்ளது.

மாநகராட்சியின் 2 வார்டுகளுக்கு ஒரு உதவிப்பொறியாளர்/ இளநிலைப்பொறியாளர் வீதம் 72 வார்டுகளுக்கு 36 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது 8 பணியிடங்கள் காலியாக உள்ளதாலும், ஈகோபார்க், ராஜாஜி பார்க், மாநகராட்சி அலுவலர் குடியிருப்புகள் போன்ற இடங்களுக்கு பராமரிப்பு பணிகளை கண்காணிக்க தனியாக உதவிப்பொறியாளர்கள் தேவை உள்ளது. 8 பணியிடங்கள் காலியாக உள்ளதால் ஓர் இளநிலைப்பொறியாளர்/உதவிப்பொறியாளர் 3 வார்டுகளின் பணிகளை பார்க்க வேண்டியுள்ளது. சாலை பராமரிப்பு, குடிநீர் விநியோகம், பாதாளசாக்கடை பராமரிப்பு பணிகளுக்காக தற்போது பொறியியல் பிரிவில் காலியாக உள்ள 8 உதவிப்பொறியாளர் மற்றும் 29 தேர்ச்சிதிறன் பணியிடங்களை நிரப்புவது அவசியமானதாக உள்ளது.

தற்போது பொது சுகாதாரப்பிரிவில் 13 அலோபதி மற்றும் சித்தா மருத்துவ அலுவலர் பணியிடங்கள் 2 காலியாக உள்ளதால் ஒரு மருத்துவ அலுவலர் இரண்டு மகப்பேறுமனை மருந்தகங்களின் பணிகளை மேற்கொள்வதால் பொது மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர். எனவே பொது சுகாதாரப்பிரிவில் உள்ள மகப்பேறுமனை, மருந்தகம் மற்றும் நல்வாழ்வு மையங்கள் பணிகள் சீராகவும் தொய்வின்றியும் மேற்கொள்ள 11 மருத்துவ அலுவலர்,( அலாபதி–10, சித்தா–1 ) 24 மருந்தாளுநர்கள் (அலோபதி–18, சித்தா–6) மற்றும் 20 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடங்களை நிரப்புவது அவசியமானதாக உள்ளது.

ஏற்கனவே மதுரை மாநகராட்சியிலிருந்து அனுப்பப்பட்ட பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள 644 சுகாதார துப்புரவு ஊழியர் பணியிடங்கள் மற்றும் 225 தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கும் அரசிடமிருந்து உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது. மதுரை மாநகரை தூய்மையாக பராமரிக்கவும் , பொதுமக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் மேற்கண்ட அடிப்படைப் பணியாளர்கள் காலிப்பணியிடங்கள் அவசியமாக நிரப்பப்பட வேண்டியுள்ளது.

மதுரை மாநகராட்சியில் மைய மற்றும் நான்கு மண்டல அலுவலகங்களில் உள்ள வேலைப்பளுவிற்கு தகுந்தாற்போல் பணியிடங்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென ஆராய்ந்து அரசாணை நிலை எண்.139,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,நாள் : 27.5.97–ல் ஆணைகள் வெளியிடப்பட்டன. இதன்படி பணியிடங்களை நிர்ணயம் செய்வதற்கு ஆணையாளரால் பிரேரணைகள் அனுப்பப்பட்டது. ஏற்கனவே இருந்த பணியிடங்கள் பல குறைக்கப்பட்டு இறுதியாக பணியாளர் எண்ணிக்கை நிர்ணயம் செய்து நிதித்துறை ஒப்புதலுடன் அரசாணை நிலை எண்.76, நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல் துறை, நாள் : 12.5.98–ல் ஆணையிடப்பட்டது. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிஓய்வு, இறப்பு போன்ற காரணங்களால் ஏற்பட்ட மேற்படி காலிப்பணியிடங்களை அரசின் தடையாணை காரணமாக நிரப்பப்படாமல் இருந்து வந்துள்ளது. எனவே தற்போது தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில் அரசால் அனுமதிக்கப்பட்ட மேற்படி காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டியது மிகவும் அவசியமாகும்.

*" வானத்தின் மழைத்துளி – வையகத்தின் உயிர்த்துளி "*

மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மேற்படி காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்வதால் ஏற்படும் கூடுதல் செலவினமும் சேர்த்து மாநகராட்சியின் ஆண்டு மொத்த வருவாயில் ஓராண்டிற்கான பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதிய செலவினம் 60 சதவீதம் ஏற்படுகிறது. மதுரை மாநகராட்சியில் சொத்துவரி சீரமைப்பு 1.10.98–ல் நடத்தப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் சொத்துவரி பொது சீராய்வு நடத்தப்படும்போது 10% முதல் 15% வரை வருவாய் கூடுதலாக கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே மேற்கண்ட விபரங்களை பரிசீலனை செய்து அரசாணை பத்தி எண்.3–ல் கண்டுள்ள நிபந்தனையை தளர்த்தி மாநகராட்சியில் காலியாக உள்ள இப்பணியிடங்களை நிரப்ப அனுமதிக்க அரசிற்கு பரிந்துரை செய்யக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 386</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**9) B.30/16967/06**

மதுரை மாநகராட்சி லாரி நிலையத்தில் உள்ள உபயோகப்படுத்தப்பட்டு தற்போது உபயோகபடுத்த இயலாத நிலையில் கழிதல் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட வாகனங்களை ஏலம் / டெண்டர் மூலம் விற்பனை செய்ய மாமன்றத்தின் (தீர்மானம் எண். 116, நாள். 01.06.2005 & எண். 322, நாள். 14.10.2005) ஒப்புதல் பெறப்பட்டு அதன் பேரில் அரசு தானியங்கி பணிமனை தானியங்கி பொறியாளர் அவர்களின் மதிப்பும், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை சென்னை இயக்குனரின் விற்பனை செய்ய ஒப்புதலும் பெறப்பட்டு உள்ளது.

அதன் படி ஏலம் / டெண்டர் மூலம் விற்பனை செய்ய நாளிதழில் உரிய விளம்பரம் வெளியிட்டு 25.01.2007 ல் ஏலம் டெண்டர் கோரப்பட்டதில் கீழ்க்காணும் வாகனங்களுக்கு வரப்பெற்ற டெண்டர்களில் மற்ற டெண்டர்களின் விலை விகிதத்தினை விட கூடுதலாகவும் மாநகராட்சி மதிப்புக்கும் கூடுதலாக கொடுத்துள்ள கீழ்க்கண்ட டெண்டர்தாரர்களின் விலை விகிதத்தினை ஏற்றுக் கொள்ளவும் டெண்டர் தொகையுடன் விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் சேர்த்து செலுத்திய பின்பு டெலிவரி கொடுக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ. எண் | கோப்பு எண். | கழிதல் வாகனம் விபரம் | மாநகராட்சி மதிப்பு | டெண்டர்தாரர் | டெண்டர் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | B 30/16967/06 | TNA 4162 லேலண்டு லாரி | ரூ. 55,000/- | S.M. ஆறுமுகம் 124, 125 கார்ப்பரேசன் லாரி நிலையம், மதுரை. | ரூ. 56,006/- |
| 2. | B 30/13142/06 | TNA 3734 லேலண்டு லாரி | ரூ. 61,000/- | S.M. ஆறுமுகம் 124, 125 கார்ப்பரேசன் லாரி நிலையம், மதுரை. | ரூ. 61,700/- |
| 3. | B 30/13146/06 | TNA 4046 பிரிமியர் லாரி | ரூ. 35,000/- | N. சரவணன் 107, திலகர் திடல், மதுரை - 1. | ரூ. 36,500/- |
| 4. | B 30/13131/06 | TNA 3544 லேலண்டு லாரி | ரூ. 61,000/- | N. சரவணன் 107, திலகர் திடல், மதுரை - 1. | ரூ. 62,000/- |
| 5. | B 30/27229/06 | MS Scrap உத்தேச எடை 300 Kg. Iron Scrap உத்தேச எடை 260 Kg. | ரூ. 7,230/- | S.M. ஆறுமுகம் 124, 125 கார்ப்பரேசன் லாரி நிலையம், மதுரை. | ரூ. 8,833/- |

**மாமன்ற தீர்மானம் எண் : 387**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**10) ம.பொ.5/ம.எ.1056/05**

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் (JNNURM) கீழ் பகுதி – II ல் (Phase – II) மதுரை மாநகரில் போக்குவரத்து மேம்படுத்தும் பொருட்டு தார்சாலை மற்றும் சிமிண்ட் சாலைகள் அமைப்பதற்கும், பொதுமக்கள் பாதுகாப்பாக நடந்து செல்லும் பொருட்டு நடைபாதை மேடைகள் அமைப்பதற்கும் மதிப்பீட்டுத் தொகை ரூ.33.59 கோடியில் பணிகள் மேற்கொள்வதற்கும், இப்பணிக்காக தேவைப்படும் நிதியை உட்கட்டமைப்பு லீசிங் & நிதி சேவைக் கழகத்தில் கடனாக பெறுவதற்கும், இக்கடன் தொகையை தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்ட நிதி விடுவிக்கப்பட்டவுடன் ஈடு செய்து கொள்வதற்கும் மாமன்றம் தீர்மானம் எண் 275, நாள் 01.09.05 ன் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியின் இரண்டாம் கட்ட (Pharse II) சாலை பணிகளுக்கு ரூ.3023.10 லட்சங்கள் கடனாக வழங்குவதற்கு தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) கடிதம் மூலம் இசைவு தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி தெரிவித்துள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகளின் (Terms & Conditions) படி கீழ்கண்ட 5 மதிப்பீட்டு பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வு (Evaluation) செய்யப்பட்டது. அதற்கான அறிக்கை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் பரிசீலனை செய்து கீழ்கண்ட 5 மதிப்பீட்டு பணிகளை அதனெதிரே குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தில் மேற்கொள்ளும் பொருட்டு வேலை உத்தரவு வழங்குவதற்கும், கீழ்கண்ட மதிப்பீடுகள் 2005-06 மதிப்பீட்டு விலை விகிதத்தில் தயாரிக்கப்பட்டிருப்பதால் 2006-07 மதிப்பீட்டு விலைவிகிதத்தில் மேற்கொள்ளும் பொருட்டு ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடு விபரம் | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (L1) | TNUDF ஒப்புதல் அளித்துள்ள தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 47 & 48 | ம.பொ.5/ம.எ.1056/05 கீழமாரட் வீதியில் தார்சாலை அமைக்கும் வேலை | 18.00 | திரு.G.புகழேந்தி | 17,88,422 |
| 2 | 5 | ம.பொ.4/ம.எ.1099/05 சங்கர் நகர் 1வது தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 20.00 | திரு.A.சீனிவாசன் | 20,48,130 |
| 3 | 6 | ம.பொ.4/ம.எ.54/05 சாரடி தெரு, ஆதி திராவிடர் தெரு, கட்டரை தெரு, மானகிரி வடக்கு தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல். | 24.95 | திரு.A.சீனிவாசன் | 24,99,088 |
| 4 | 5 | ம.பொ.4/ம.எ.1174/05 புதூர் பஸ் ஸ்டாண்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 24.99 | திரு.A.சீனிவாசன் | 24,99,980 |
| 5 | 5 | ம.பொ.4/ம.எ.1098/ 05 இந்திரா நகர் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல். | 24.50 | திரு.K.சொக்கலிங் கம் | 24,05,061 |

**மாமன்ற தீர்மானம் எண் : 388**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**11) ம.பொ. 6 / ம.எண். 1444 / 06**

மதுரை மாநகர் அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவிலைச் சுற்றி அபிவிருத்தி பணிகள் செய்ய மத்திய சுற்றுலாத்துறை தனது கடித எண் 5/PSW/30/06ன் படி கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

1. சித்திரை வீதிகளை சுற்றி புல் தரை அமைத்து அழகுபடுத்துதல் — ரூ.79.00 இலட்சங்கள்
2. நான்கு சித்திரை வீதிகளுக்கு Paver Block சாலை அமைக்க — ரூ.93.18 இலட்சங்கள்
3. மின்சார கேபிள் பதிக்க சிமெண்ட கான்கீரிட் தொட்டி அமைக்க — ரூ.31.90 இலட்சங்கள்
4. அலங்கார சுவர் மற்றும் கிரில் அமைக்க — ரூ.76.00 இலட்சங்கள்

---------------------------

ரூ.280.08 இலட்சங்கள்

------------------------------

மேற்கண்ட பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதல் தீர்மானம் எண் 351 நாள்: 31.1.07ல் பெறப்பட்டு, 27.2.06ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே மதிப்பாய்வுக்குழுவில் ஒப்புதல் பெறப்பட்ட ஒப்பந்தகளுக்குரிய ஒப்பந்ததாரர்களுக்கு கீழ்கண்டவாறு வேலை துவங்கும் உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடுஎண் / வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | 2006 / 07ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதம் கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|---|
| 1 | 36 | ம.பொ. 6/ ம.எ. 1444/06 வார்டு எண். 36 ல் மேற்கு சித்திரை வீதியில் (பகுதி) Paver Block சாலை அமைத்தல் (க.எண். 2/3 முதல் கதவு எண். 18 A வரை) | ரூ. 18.48 | R.ராமு | கூடுதல் 4.28% |
| 2 | 38 | ம.பொ. 6/ ம.எ. 1445/06 வார்டு எண். 38 ல் கிழக்கு சித்திரை வீதியில் Paver Block சாலை அமைத்தல் (உறாஜீ முஸா கடை முதல் மதுரை பேப்ரிக்ஸ் வரை) | ரூ. 24.90 | R.ராமு | கூடுதல் 4.32% |

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடுஎண் / வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | 2006 / 07ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதம் கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|---|
| 3 | 38 | ம.பொ. 6/ ம.எ. 1446/06 வார்டு எண். 38 ல் தெற்கு சித்திரை வீதியில் (பகுதி) Paver Block சாலை அமைத்தல் (கதவு எண். 16,17 முதல் நேதாஜி ரோடு சந்திப்பு வரை) | ரூ. 24.90 | R.ராமு | கூடுதல் 4.32% |
| 4 | 38 | ம.பொ. 6/ ம.எ. 1447/06 வார்டு எண். 36 ல் கிழக்கு தெற்கு சித்திரை வீதியில் (பகுதி) Paver Block சாலை அமைத்தல் | ரூ. 24.90 | R.ராமு | கூடுதல் 4.32% |
| 5 | **36 & 37** | ம.பொ. 6/ ம.எ. 1414/06 வார்டு எண். 36, 37 ல் மேற்கு சித்திரை வீதி மற்றும் வடக்கு சித்திரை வீதியில் Cable Duck (பூமிக்கடியில் மின் வயர் செல்லும் பாதை) அமைத்தல். | ரூ. 16.90 | R.ராமு | கூடுதல் 4.34% |
| 6 | **38** | ம.பொ. 6/ ம.எ. 1415/06 வார்டு எண். 38 ல் கிழக்கு மற்றும் தெற்கு சித்திரை வீதி மற்றும் வடக்கு சித்திரை வீதியில் Cable Duck (பூமிக்கடியில் மின் வயர் செல்லும் பாதை) அமைத்தல். | ரூ. 16.90 | R.ராமு | கூடுதல் 4.34% |
| 7 | **38** | ம.பொ. 6/ ம.எ. 1410/06 வார்டு எண். 38 ல் கிழக்கு சித்திரை வீதியில் மதில் சுவர் கட்டி அலங்கார கிரில் அமைத்தல். | ரூ. 19.40 | R.முருகப் பெருமாள் | கூடுதல் 4.29% |
| 8 | **37** | ம.பொ. 6/ ம.எ. 1411/06 வார்டு எண். 37 ல் வடக்கு சித்திரை வீதியில் மதில் சுவர் கட்டி அலங்கார கிரில் அமைத்தல். | ரூ. 19.20 | R.முருகப் பெருமாள் | கூடுதல் 4.29% |
| 9 | **38** | ம.பொ. 6/ ம.எ. 1412/06 வார்டு எண். 38 ல் தெற்கு சித்திரை வீதியில் மதில் சுவர் கட்டி அலங்கார கிரில் அமைத்தல். | ரூ. 20.86 | R.முருகப் பெருமாள் | கூடுதல் 4.31% |
| 10 | **36** | ம.பொ. 6/ ம.எ. 1413/06 வார்டு எண். 36 ல் மேற்கு சித்திரை வீதியில் மதில் சுவர் கட்டி அலங்கார கிரில் அமைத்தல். | ரூ. 20.00 | R.முருகப் பெருமாள் | கூடுதல் 4.33% |
| 11 | **38** | ம.பொ. 6/ ம.எ. 1213/05 வார்டு எண். 38 ல் தெற்கு சித்திரை வீதியில் மீனாட்சியம்மன் கோவில் முன்புறம் புல்தளம் அமைத்தல் (Land Scapping) | ரூ. 24.70 | P.அன்ன லெட்சுமி | குறைவு 0.05% |
| 12 | **38** | ம.பொ. 6/ ம.எ. 1214/05 வார்டு எண். 38 ல் கீழ சித்திரை வீதியில் மீனாட்சியம்மன் கோவில் முன்புறம் புல்தளம் அமைத்தல் (Land Scapping) | ரூ. 24.90 | B.முகைதீன் கமால் பாட்சா | குறைவு 0.80% |
| 13 | **37** | ம.பொ. 6/ ம.எ. 1216/05 வார்டு எண். 37 ல் வடக்கு சித்திரை வீதியில் மீனாட்சியம்மன் கோவில் முன்புறம் புல்தளம் அமைத்தல் (Land Scapping) | ரூ. 24.90 | B.முகைதீன் கமால் பாட்சா | குறைவு 0.80% |
| 14 | **37** | ம.பொ. 6/ ம.எ. 1416/06 வார்டு எண். 37 ல் வடக்கு சித்திரை வீதியில் (பகுதி) புல்தளம் அமைத்தல் | ரூ. 4.50 | P. அன்ன லெட்சுமி | குறைவு 0.05% |

**மாமன்ற தீர்மானம் எண் : 389**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12) Jn.S.1/ 01080/07**

மதுரை மாநகராட்சியில் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ், திடகழிவு மேலாண்மை திட்டத்திற்கென மத்திய அரசின் 02.02.2007 ஆம் தேதிய கூட்டத்தில் மதுரை மாநகராட்சிக்கு ரூ. 7429 லட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (இத்தொகையில் மத்திய அரசு 50% மானியமும், மாநில அரசு 20% மானியமும், மாநகராட்சி பங்குத் தொகையாக 30% வழங்கப்பட்டுள்ளது) இத்தொகை கீழ்கண்ட பணிகளை நிறைவேற்ற ஒதுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | விவரம் | அளவு (எண்ணிக்கை) | தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|
| I | முதற்கட்ட குப்பை சேகரிக்கும் பணி (Primary Collection) | | |
| | 1. வீடு வீடாக குப்பைகளை பிரித்து வாங்குவதற்கு பிளாஸ்டிக் கூடைகள் | 522645 | 130.66 |
| | 2. மூன்று சக்கர சைக்கிள் மற்றும் தள்ளு வண்டிகள் | 1284 | 139.29 |
| | 3. துப்புரவு பணியாளர் பாதுகாப்பு சாமான்கள் ஓராண்டுக்கு (Safety Equipment) | 2028 | 42.72 |
| | 4. லாரி (Tipper Lorry) | 4 | 34.74 |
| II | இரண்டாம் கட்ட சேகரிப்ப (Secondary Collection) | | |
| | 1. டம்பர் பின் (குடியிருப்பு பகுதி) | 435 | 213.15 |
| | 2. டம்பர் பின் மார்கெட், பேருந்து நிலையம், வணிக வளாகம் ரயில்வே நிலையம் | 135 | 66.15 |
| III | போக்குவரத்து வாகனங்கள் | | |
| | 1. டம்பர் பிளேசர் | 47 | 669.60 |
| | 2. காம்பேக்டர் மவுண்டர் (அனைத்து பாகங்கள் உள்பட ) | 4 | 105.46 |
| | 3. தெரு கூட்டும் வாகனம் (Street Sweeping Machine) (மெக்கானிக்கல் வாகனம் ) | 4 | 48.00 |
| | 4. மினி லோடர் (BOB Cat) | 4 | 72.66 |
| IV | 1. உரங்கிடங்கு நவீன மயமாக்கும் முறை | 1 | 1736.02 |
| | 2, உரம் தயாரித்தல் | 1 | 947.95 |
| | 3. சானிடரி லேண்டு பில் 5 ஆண்டிற்கு | 1 | 1301.29 |
| | 4. பரி சோதனை நிலையம், பருவகால அறை, குப்பை சேகரிக்கும் இடம், மற்றும் மழை பாதுகாப்பு சாதனம் | 1 | 854.12 |
| | 5. மின் உபநிலையம், பண்டக சாலை பரிசோதனை கூடம், கட்டுப்பாட்டு அறை, D.G. Room, வாகனம் மற்றும் பாதுகாவலர் அலுவலகம் | 1 | 891.05 |
| V | I.E.C. பணிகள் செய்தல் | 1 | 36.38 |
| | 2. சில்லரைச் செலவவினங்கள் 3% | | 219.40 |
| | **மொத்தம்** | | ====== **7531.00** |
| | இவற்றில் 12 - வது நிதி குழு திட்டமதிப்பீடு ரூ. 102 லட்சம் நீங்கலாக (-) | | 102.00 (-) |
| | **ஆக மொத்தம்** | | ====== **7429.00** ====== |

மேற்கண்ட தொகை ரூ. 7429/- லட்சம் ஒப்புதல் பெற்ற விவரம் மற்றும் இவ்வினங்களுக்கு தனித்தனியாக ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தொழில் நுட்ப ஒப்புதல் நடவடிக்கை மேற்கொள்ளவும் மாநகராட்சி பங்குத்தொகை 30% சதவீதத்தை நிதி நிறுவனத்தில் TUFIDCO / TUFISL கடன் பெற்று நிறைவேற்ற மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையர் அவர்களின் குறிப்பு.

<u>தொகை பங்களிப்பு விவரம்</u>

1. மத்திய அரசு மானியம் = 50 %
2. மாநில அரசு மானியம் = 20 %
3. மாநகராட்சி பங்குத் தொகை = 30 %

(பங்குத்தொகை நிதி நிறுவனம் மூலம் கடன் பெற்று நிறைவேற்றப்படும்)

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 390</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**13) <u>ம.தி.2/ 31671 /05</u>**

மதுரை மாநகராட்சி வார்டு 34, சர்வே வார்டு.5, பிளாக் எண். 73, புல எண். 19ல் மனுதாரர் திரு.செல்வராஜ் மற்றும் பூங்கோதை கதவு எண்.16பி வியாசராயபுரம் மடம் சந்தில் GCR V – 36/92 வரைபட அனுமதி எண். 77/ 92 நாள். 3.1.92ல் மாநகராட்சி அனுமதி பெற்று கட்டிடம் கட்டியதாகவும் சர்வே ஆவணங்களில் மனையின் தென்புறம் சுமார் 30’ 0’ x 8’ 0’ அளவுள்ள இடம் மாநகராட்சி சந்து

என்று இருப்பதை தனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்து தருமாறு தனி அலுவலர் நகரளவை இறுதி தணிக்கை மதுரை தெற்கு அவர்களுக்கு விண்ணப்பம் செய்துள்ளார்.

மனுதாரர் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய ஆட்சேபனை எதுவும் உள்ளதா என தனி அலுவலர் நகரளவை இறுதி தணிக்கை அவர்களிடமிருந்து ஓ.மு.ம.ப. எண். 437/05 நாள். 9.9.2005ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட இடம் சம்பந்தமாக மாநகராட்சிக்கும், மனையின் முந்தைய உரிமையாளர்களுக்கும் இடையே வழக்கு நடைபெற்று இறுதியாக மனுதாரர் கிரையம் பெற்ற இடத்தின் உரிமையாளருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் எஸ்.எ.1261 / 71ல் மாநகராட்சி தொடர்ந்த வழக்கிலும் மனுதாரர் கிரையம் பெற்ற இடத்தின் உரிமையாளருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மாநகராட்சியின் உயர்நீதிமன்ற நிரந்தர வழக்கறிஞரின் 7.2.2006ம் தேதிய கருத்தில் இம்மாநகராட்சியால் இரண்டாவது மேல்முறையீடும் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட தாவா சொத்தை மாநகராட்சி சொந்தம் கொண்டாட இயலாது என்றும் மனுதாருக்கு தடையில்லா சான்று வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளதால் சர்வே ஆவணங்களில் மேற்படி தாவா சொத்து மாநகராட்சிக்குச் சொந்தமான சந்து என இருப்பதை மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று மனுதாரரின் பெயருக்கு பட்டா மாறுதல் செய்து கொள்ள தடையில்லா சான்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டது. மாமன்றத்தின் 89 எண்ணிட்ட 29.6.2006ம் தேதிய தீர்மானத்தில் மீண்டும் நன்கு பரிசீலித்து குறிப்பு வைக்குமாறு தெரிவிக்கப்பட்டதின்படி மேற்படி பொருள் பரிசீலிக்கப்பட்டு மீண்டும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 391</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

***" வீட்டுக்கு வீடு மழைநீர் சேமிப்போம் – நீர் வளம் பெருக்குவோம் "***

## 14) <u>ம.பொ.4/36882/06</u>

மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் எதிர்பகுதியில் பத்திரிக்கையாளர் குடியிருப்பு உள்ளிட்ட பல்வேறு வீடுகளுக்கு மத்தியில் மதுரை வடக்கு தாலுகா தல்லாகுளம் சர்வே எண் 134/2A1ல் தற்போது இயங்கிவரும் சுற்றுச் சுவருடன் கூடிய இந்துக்களின் எரியூட்டு மயானம் அருகில் உள்ள 3ஏக்கர் அளவிலான இடத்தில் உயர் தொழில் நுட்ப எரிவாயு நவீன மயானம் அமைக்க மேற்கண்ட இடத்தை சப் டிவிசன் செய்து தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்திற்கு கிரையமின்றி ஒப்படை வழங்கவோ அல்லது குறைந்த குத்தகைத் தொகையில் நீண்ட கால குத்தகைக்கு (30 ஆண்டுகளுக்கு குறையாமல்) வழங்கவோ அனுமதி கோரிட தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்திடமிருந்து மனு வரப்பெற்றுள்ளது. மேலும் மேற்கண்ட குத்தகைக்காலம் முடிவடைந்தவுடன் அதை புதுப்பித்துக் கொள்ளும் உரிமையை வர்த்தக சங்கத்திற்கு வழங்க வேண்டும் என்றும், நவீன மயானம் அமைத்து அதற்கான எரியூட்டுக் கட்டணம் வசூலித்து உரிய முறையில் பராமரிப்பு செய்து கொள்ள அங்கீகாரத்தை அளித்திட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளதுடன் முதல் கட்டமாக எரியூட்டுக் கட்டணம் ரூ.1200/- என நிர்ணயிக்கவும் அதன் பின்னர் ஒவ்வொரு மூன்றாண்டுக்கும் Gas முதலிய செலவினங்களின் உயர்வை சரிக்கட்ட கட்டணத்தை 15% உயர்த்திக் கொள்ள வர்த்தக சங்கத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட நவீன மயானம் அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ள சர்வே இடத்தின் விபரம் தெரிவிக்க மாநகராட்சி நகரமைப்பு சர்வேயரின் குறிப்பு கோரப்பட்டதில் சம்பந்தப்பட்ட சர்வே எண் 134/2A1 பொதுப்பணித்துறைக்கு பாத்தியப்பட்ட புதுக்குளம்கண்மாய் என்ற பெயரில் வருவாய் துறை, மற்றும் பல உட்பிரிவுகளாகப் பிரித்து ரோடு, இந்து, முஸ்லீம், கிறித்துவ மயானம் மற்றும் பல துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட இடத்தில் வர்த்தக சங்கம் குறிப்பிட்டுள்ள 3 ஏக்கர் பரப்பளவில் நவீன எரிவாயு மயானம் அமைக்க இடக்குத்தகை மற்றும் அனுமதி வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் கருத்தைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 392</u>**

**இந்த இடத்தை நன்கு ஆய்வு செய்து விபரமான குறிப்புடன் அடுத்த கூட்டத்தில் வைக்க வேண்டியது எனத் தீர்மானிக்கிறது.**

## 15) <u>கி.ம.பொ.7/7052/06</u>

மதுரை மாநகராட்சி வார்டு 56 காமராஜர்புரம் ராம் தியேட்டர் காய்கறி மார்க்கெட்டிற்கு அருகில் சர்வே வார்டு எண். 1 பிளாக் எண். 66, சர்வே எண்.24-ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் 56, 57 ஆகிய இரண்டு வார்டுகளுக்கு பயன்படும் வகையில் மண்ணெண்ணெய் விநியோக மையம் அமைக்க கிழக்கு மண்டலத் தலைவர் கோரிக்கை வைத்து உள்ளதால், மேற்படி இடத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் மையம் அமைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 393</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**16)** <u>ம.வ.3 / 29947 / 2006</u>

மதுரை மாநகரின் வடபகுதியில் தற்போது இயங்கிவரும் ரயில்வே முன்பதிவு மைய கட்டிடம் (Railway Reservation Counters) மிகவும் பழுதடைந்த நிலையில் பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாலும், மேலும் பொதுமக்களின் நலன் மற்றும் ரயில்வே துறை பொதுமக்களுக்கு ஆற்றிவரும் சேவைகளுக்கு எவ்வித இடையூறும் நேராவண்ணம் மேற்படி பணிகள் செவ்வனே நடைபெறுவதை கருத்தில்கொண்டு, செயல்பட இருப்பதால், மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான தல்லாகுளம் பெருமாள் கோவில் மேல்புறம் சுகாதார டிவிசன் அலுவலகம் இயங்கிவரும் கட்டிட வளாகத்தில் உள்ள காலியிடத்தில் வரைபடத்தில் கூறிப்பிட்டுள்ளவாறு 1512.86 சதுர அடி இடத்தினை மேற்படி மதுரை மாநகர் வடபகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ரயில்வே முன்பதிவு மையம் அமைக்க ரயில்வே நிர்வாகத்திற்கு வழங்கிய கோரிய உதவி ரயில்வே கோட்ட மேலாளர் அவர்களின் 29.1.2007-ம் தேதிய U/C14/PA/PAR/MDUT எண்ணிட்ட கடிதம் வாசிக்கப்பட்டு பிரஸ்தாப இடத்தில் ரயில்வே முன்பதிவு மையம் அமைக்க 1512.86 சதுர அடி இடத்தில் கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதியும், மாநகராட்சி நிர்ணயம் செய்யும் மாதாந்திர தரை வாடகை பெறவும், Build Own Operate and Transfer (BOOT) அடிப்படையில் 10 வருடங்கள் உபயோகித்து, பின் மாநகராட்சியிடம் எந்த ஒரு இழப்பீடு அல்லது கட்டிடத்திற்கான செலவினத்தையோ கோராமல் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலும், மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு, ரயில்வே நிர்வாகத்திற்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>குறிப்பு :</u>** 1) 1512.86 சதுர அடியில் கட்டப்படவுள்ள கட்டுமானத்திற்குண்டான மதிப்பீடு (Estimate) சமா்ப்பிக்கப்பட வேண்டும்.

2) மேற்படி காலியிடத்தில் கட்டுமான பணி முடிவுப்பெற்று மேற்படி கட்டிடம் மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்து பின்னர் மாத உரிமத் தொகை நிர்ணயம் செய்யலாம்.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 394</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**<u>17) சி.டபிள்யு.3 / 39181 / 2007</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-1 விதி 19(2)ன் படி 07.03.2007ம் தேதி நடைபெற்ற சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 395</u>**

**பதிவு செய்யப்பட்டது**

**(ஒம்...) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 13.3.2007**

*" வான் தந்த மழை காப்போம் – வாழ்வுக்கு வளம் சேர்ப்போம் "*

* * * * * * *